*Government of Puducherry*
*Lieutenant Governor's Secretariat*

*No. LGS/PRO/2020* *மார்ச் 12, 2020*

## பத்திரிக்கைச் செய்தி

**திருமதி பூரணம்** வடிவேலன் மிகவும் ஏழ்மையான விவசாய குடும்பத்தில் பிறந்தவர் 10-ம் வகுப்பு ஆரம்பக்கல்வி முடித்தவுடன். அவர்களின் 19-ம் வயதில் எரிவாயு பழுதுபார்ப்பவரை திருமணம் செய்துக்கொண்டார் அவர்களுக்கு 3 மகன்கள் உள்ளனர் முதல் மகன் இளநிலை பொறியாலர் படிப்பை படித்து உள்ளார். 2வது மகன் இளநிலை அறிவியில்(Cardiology), மற்றும் 3 வது மகன் இளநிலை நிர்வாக படிப்பை படித்துக் கொண்ட இருக்கிறார்கள்.

2006-ம் ஆண்டு பாரதம் மகளிர் சுய உதவிக்குழுத் தொடங்கி 12 பெண்களுக்கு தலைவியாக செயல்படுகிறார். தனியாரிடம் அதிக வட்டிக்கு கடன் வாங்காமல் வில்லியனூர் வாட்டாரத்திற்கு உற்பட்ட தொண்டமாநத்தம் பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பில் கடன் பெற்று வாழ்வாதாரத்தை பூர்த்தி செய்கிறார்.

2016-ஆம் ஆண்டு அவர் கணவர் பக்கவாதம் ஏற்பட்ட போதும் அவர் பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பின் தலைவியாக செயல்படுவது அவருடைய மன தைரியத்தை வெளிக்காட்டுகிறது.

**சுய உதவி குழுவிற்கான பங்களிப்பு:**

1. இவர் பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பின் தலைவியாக பதவி ஏற்றத்திற்கு பின்னர் சுமார் 50 சுய உதவி குழுக்களை நிர்வாகித்து அதன் உறுப்பினர்களுக்கு சுய உதவிக்குழுக்களுக்கான கடன் கிடைப்பதற்கான வசதி வாய்ப்பை ஏற்படுத்தி பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பின் மூலம் சுமார் 75 லட்சம் கடன் கிடைக்க செய்து அதன் மூலம் தற்போது அந்த பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பில் ரூ. 4 லட்சம் வட்டித்தொகை இருப்பாக இன்றைய தேதயில் இருக்கும் படிச் செய்து உள்ளார்.
2. இவர் தமது கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு இந்தியன் வங்கி (ஐனௌளநவவை) மூலம் தரப்படுகிற பலத்தரப்பட்ட பயிற்சிகள் மற்றும் பெருந்தலைவர் காமராசர் வேளாண் அறிவியல் நிலையம்

மூலமும் மற்றும் புதுச்சேரி கால்நடை கல்லூரியின் மூலம் பலத்தரப்பட்ட பயிற்சிகள் கிடைக்க உதவிப்புரிந்து சுய உதவிக்குழுக்களுக்கு உறுப்பினர்களுக்கு தொழில் வளத்துடன் கூடிய தன்னம்பிக்கை கிடைக்க உதவிப்புரிந்து வருகிறார்.

3. தற்போது 15 உறுப்பினர்களை ஆடுவளர்ப்பு தொழிலில் தங்கள் வாழ்வாதாரம் மேம்பட செய்து உள்ளார்.
4. தனது கூட்டமைப்புக்கு உட்பட்ட பகுதிகளில் கால்நடை மருத்துவ முகாம் நடைபெற ஏற்பாடுகள் செய்து உள்ளார்.
5. இவர் தமது கூட்டமைப்புக்கு உட்பட்ட உறுப்பினர் அனைவருக்கும் (ளுடீஆ) தூய்மை பாரதம் இயக்க திட்டத்தின் கீழ் கழிவறைகள் கட்டிக் கொடுப்பதற்கான வசதிவாய்ப்பினை ஏற்படுத்தி உள்ளார். மேலும் அனைத்துசுய உதவிக்குழு உறுப்பினர்கள் பிரதான் மந்திரி ஜந்தன் யோஜனா (ீஆதுீலு) திட்டத்தின் கீழ் இன்சூரன் காப்பீடு செய்துள்ளார். இவரால் தற்போது இவரது கிராமத்தில் உள்ள அனைத்து வீடுகளிலும் கழிவறைகள் உள்ளது.

இவரது எதிர்கால கனவுகள் திட்டங்கள்:

1.நெல் உற்பத்தியாளர்களை அதிகப்படுத்தி அவர்கள் மூலம் தனது சொந்த கிராமத்தில் இடைதரகர்கள் தொந்தரவு இல்லாமல் விற்பனை செய்யும் படியான அமைப்பை ஏற்படுத்துதல்.

2. விவசாயம் மற்றும் கால்நடை பண்ணைப்பொருட்கள் பால் உற்பத்தியாளர் குழுக்களை அமைப்பதற்கான வசதி வாய்ப்பினை ஏற்படுத்துதல்.

-o0o-